கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இது ஸ்பெஷலிஸ்ட் வொர்க்ஸ். இதை நமது அரசாங்கத்திலிருந்து ஆரம்பிக்க உத்தேசமில்லை. மத்திய அரசாங்கத்தின்கீழ் எச்.எம்.டி. தொழிற்சாலை ஒன்று இதற்காக நடந்து வருகிறது.

திரு. இரா. நெடுஞ்செழியன் : கனம் தலைவர் அவர்களே, கைக் கடிகார தொழிற்சாலையை ஆரம்பிக்க வந்தவர்கள் வேறு மாநிலத்தில் போய் ஆரம்பித்து விட்டார்கள் என்று அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். அதற்கு என்ன காரணம்?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : கூனூரில் எல்லா இடத்தையும் அவர்கள் சுற்றிப்பார்த்தார்கள், அவர்களோடு நம்முடைய அரசாங்கத்திலிருந்து இன்டஸ்ட்ரீஸ் அசிஸ்டன்ட் டைரக்டர் அவர்களையும் அனுப்பினேம். அவர்கள் கேட்ட இடத்திற்கு, இடத்தின் சொந்தக்காரர்கள், ஏக்கருக்கு ரூ. 15 ஆயிரம் விதம் வேண்டும் என்று கேட்டார்கள். இவ்வளவு அதிக விலை கொடுத்து வாங்க அவர்கள் தயாராக இல்லாமல் இருந்ததினால் அவர்கள் வேறு இடத்திற்குப் போய்விட்டார்கள்.

தொழில் நிறுவனங்களுக்கான லைசென்ஸ்

*102 கேள்வி.—திரு. து. ப. அழகமுத்து : கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) வெளிநாட்டுச் செலாவணி இல்லாமல் அமைக்கப்படும் தொழில் நிறுவனங்களுக்கு லைசென்ஸ்கள் வழங்கும் முறையைத் தளர்த்த வேண்டும் என மத்திய அரசாங்கத்திற்கு, மாநில அரசாங்கம் சிபாரிசு செய்துள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரங்கள் என்ன?

THE HON. SRI R. VENKATARAMAN : (a) The State Government did not send any official communication to the Government of India in this regard.

(b) With reference to the views generally expressed by the State Government as well as industrialists for liberalising the licensing procedure under the Industries (Development and Regulation) Act, the Government of India decided, on the recommendation of a Committee set up for the purpose, that industrial undertakings with capital assets not exceeding Rs. 25 lakhs which do not involve import of capital goods and raw materials, may be started without a licence under the Act, but such undertakings are required to register themselves with the Director-General of Technical Development for statistical purposes before they go into production.

திரு. து. ப. அழகமுத்து : தலைவர் அவர்களே, தொழில் வளர்ச்சியை உத்தேசித்து அன்னியச் செலாவணி தேவை இல்லாத தொழிலுக்கு லைசன்ஸ் வழங்கும் முறையை ரத்து செய்ய வேண்டும்

7th August 1965]

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : தனியார் துறையில் நிறைய லே தொழிற்சாலைகள் இருக்கின்றன. ஆகவே நாம் தனியாக ஆரம்பிக்க வேண்டியத்தில்லை.

K.C.P., Limited, Madras.

Binny's Engineering Works, Madras.

Richardson and Cruddas, Limited, Madras.

Garlick and Company, Limited, Madras.

இவ்விதம் நிறைய தொழிற்சாலைகள் இருக்கின்றன. ஆதலால் நாம் இதில் போய் தலையிட வேண்டியதில்லை.

Aid under Colombo Plan

* 106 *Q.*—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) the names of countries that aid in the development of industries in the State under the Colombo Plan; and

(*b*) the details of the same?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) & (*b*) A statement [a] is placed on the table of the House.

திரு. வை. சங்கரன் : இந்த மேஜை மேல் வைக்கப்பட்டிருக்கும் அறிக்கையில் டெக்னிக்கல் எக்ஸ்பர்ட் எக்ஸ்சேஞ்ச் பற்றித்தான் விவரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. வேறு பண வசதியோ, யந்திர வசதியோ மற்ற வசதிகளோ இந்தத் திட்டத்தின் கீழ் அளித்துள்ளார்களா என்று அறியலாமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இந்தக் கேள்வி இண்டஸ்ட்ரீஸைப்பற்றியது. இண்டஸ்ட்ரீஸ்ல் இதைத் தவிர வேறு உதவி கிடைக்கவில்லை.

சென்னையில் உலக வர்த்தகப் பொருட்காட்சி

* 107 கேள்வி.—திரு. கரு. சீமைச்சாமி : கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சென்னையில் உலக வர்த்தகப் பொருட்காட்சி நடத்த வேண்டும் என்று கோரி விண்ணப்பம் ஏதேனும் வந்துள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) & (*b*) Yes, Sir.

The Indian International Trade and Industries Fair is being organised by the All India Manufacturers' Organisation in Madras from 27th December 1966 to 31st January 1967, through the the Industrial Foundation. The Central Government have given permission to the All-India Manufacturers' Organisation to hold the Fair.

---

[a] Printed as Appendix I on pages 3[illegible]–[illegible]32.